## உறுப்பினர்களின் முயற்சிகளின் தாக்கம்

உறுப்பினர்களின் மொத்த முயற்சிகளின் விளைவுகள் அளவிலும் மற்றும் பலாபலனுக்கு எடுத்துக்காட்டாக உள்ளன:


**களத்தில் விளைவுகள்**
- 1,150 நீரூற்றுகளில் நீர்ப்பிடிப்புப் பகுதியின் அடையாளம்
- 1,50,000 மக்களுக்கு மேம்பட்ட தண்ணீர்வசதி
- நீரூற்றுகளில் ஐந்துமடங்கு வரை நீரோட்டம் அதிகரிப்பு

**திறன் மேம்பாடு**
- எட்டு மாநிலங்களில் பயிற்சி மற்றும் விழிப்புணர்வு செயல்பாடுகள், இதனுடன் ஆறு மொழிகளில் விளக்க ஏடுகள்

**பரப்புரை**
- மாநில மற்றும் மத்திய அரசாங்க கொள்கைகளில் நீரூற்று பாதுகாப்பு தொடர்புடைய நடவடிக்கைகளை சேர்த்தல்

**தகவல் சேகரிப்பு மற்றும் ஆராய்ச்சி**
- இருப்பிட ஆயங்களுடன் முப்பதுக்கும் மேற்பட்ட அளவூறுகளைக் கொண்ட தனிப்பட்ட தேசிய தகவல் தொகுப்பு
- அளவிலும் தரத்திலும் மேம்பட்ட தண்ணீர் பத்திரப்படுத்துதலுக்கான அளவைக்குறிய சான்று

நீரூற்றின் நீரோட்டமும் மழையும் மூன்றாண்டு காலத்தில்




உத்தராகண்ட் மாநிலத்தில் சிராக் நிறுவனத்தின் களத்தில் உள்ள ஒரு நீரூற்றில் நீரூற்று பாதுகாப்பு மற்றும் மேம்படுத்தலின் விளைவுகள். பணிகள் முடிந்தப்பின்னர் 2012ஆம் ஆண்டு வறட்சி காலத்தில் கூட நீரூற்றில் நீரோட்டம் அதிகரித்துள்ளது.


## இம்முயற்சியைப் பற்றி

நீரூற்று முயற்சியானது களத்தில் பணிபுரியும் அறிவை வளர்க்கும் மற்றும் நிதியுதவி செய்யும் நிறுவனங்களின் ஓர் கூட்டமாகும்.

இம்முயற்சியில் உறுப்பினராக இதை ஆதரிக்க அல்லது இதைப்பற்றி அறிந்துக்கொள்ள உங்களுக்கு அருகே உள்ள நீரூற்று முயற்சி உறுப்பினரை அணுகவும் அல்லது **springsinitiative@gmail.com**க்கு மின்னஞ்சல் அனுப்பவும்.

## ஒரு தேசிய முயற்சி

நீரூற்றுகளைப் பற்றி நமது பொதுவான அறிவை வளர்க்கவும் நீரூற்றுகளின் மேலாண்மையை மேம்படுத்தவும் இந்தியாவில் பல்வேறு பகுதிகளில் உறுப்பினர்கள் பணிபுரிகிறார்கள்.



கொள்கைகளின் அலசல், சமுதாய ஆய்வுகள், நீரோட்டத்தை கண்காணித்தல் மற்றும் ஆராய்ச்சி மூலம் நாங்கள் இந்த இன்றியமையாத ஆதாரங்களை பற்றிய ஓர் தனிப்பட்ட அறிவு தளத்தை உருவாக்குகிறோம்.

கீஸ்டோன் அறக்கட்டளை
விசாக ஜில்லா நவ நிர்மாண் சமிதி (VJNNS)
சென்ட்ரல் இமாலயன் ரூரல் ஆக்ஷன் குரூப் (CHIRAG)
இமாலய சேவா சங் (HSS)
சிக்கிம் அரசாங்கம்
மேகாலயா அரசாங்கம்
பீபல் சயின்ஸ் இன்ஸ்ட்டியூட் (PSI)
கிராம்பரி (GRAMPARI)
அக்வடேம் (ACWADAM)
அர்க்யம் அறக்கட்டளை

# நீரூற்றுகள் முயற்சி



### ஊற்றுநீர் பிடிப்புப் பகுதி பாதுகாப்பு மற்றும் வளர்ச்சி


- பாதுகாப்பான குடிநீரைப் பத்திரப்படுத்துவதற்கான நடவடிக்கைகள்
- ஆராய்ச்சி மூலம் நமது அறிவை மேம்படுத்துதல்
- அரசுக் கொள்கையில் கவனம் உருவாக்கப் பரப்புரை
- துறைக்குள் அனைவருடைய திறனை வளர்த்தல்

# 10 இலட்சத்திற்கும் மேலான நீரூற்றுகள்

இந்தியாவில் 10 இலட்சத்திற்கும் மேலான நீரூற்றுகள் உள்ளன. குறிப்பாக மேற்கு தொடர்ச்சி மலையில் உள்ள நீலகிரியிலிருந்து இமயமலை வரை உள்ள கிராம மற்றும் நகர்ப்புற மக்களின் பாதுகாப்பான குடிநீரின் ஒரு முக்கிய ஆதாரம் நீரூற்றுகள் ஆகும். பலருக்கும் நீரின் ஆதாரம் நீரூற்றுகள் மட்டுமே.

மாறிவரும் நில பயன்பாடு, சுற்றுச்சூழல் சீரழிவு, சுரண்டல் மற்றும் தட்பவெப்ப நிலை மாற்றங்கள் அனைத்தும் நீரூற்றுகளின் ஓட்டத்தை பாதிக்கின்றன. இந்த முக்கியமான ஆதாரங்களைப் பாதுகாக்கும் முயற்சிகள் தண்ணீரை பத்திரப்படுத்த மற்றும் நிலம் மற்றும் தண்ணீர் ஆதாரங்களின் மேலாண்மையை மேம்படுத்த உதவும்.

நீரூற்று முயற்சியானது, நீரூற்றின் முக்கியத்துவத்தை பற்றிய விழிப்புணர்வை பரப்பவும், நாடு முழுவதும் நீர்ப்பிடிப்புப் பகுதிகளின் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி குறித்த திறன் மேம்பாட்டு வேலையிலும் ஈடுபட்டுள்ளது.





- ஊற்று நீர்ப்பரப்புப் பகுதியின் மேலாண்மைக்கான அணுகுமுறை பாரம்பரிய ஆற்று நீர்ப்பிடிப்புப் பகுதியைக் கருதாமல் ஒரு பள்ளத்தாக்கிலிருந்து மற்றொரு பள்ளத்தாக்கு வரையான பகுதியைக் கருதும்.
- நீர்கொள் படுகையையும் நீர்க்கசிவுப் பகுதியையும் கண்டறிய நீர்ப்புவியியல் இன்றியமையாததாகும்.
- நீர்க்கசிவுப் பகுதியும் நீர் வெளியேற்றுப் பகுதியும் வெவ்வேறு கிராமங்களின் எல்லைகளுள் உள்ளன.
- ஊற்று நீர்ப்பிடிப்புப் பகுதியின் மேலாண்மை பயனுள்ளதாக இருக்க இரண்டு கிராமங்களும் ஒத்துழைத்து நீர் பத்திரப்படுத்துதலுக்கான விதிமுறைகளை உருவாக்க வேண்டும்.


# நீர் பத்திரப்படுத்துதலுக்கான ஒரு வழிகாட்டி

## ஒரு நீர்ப்புவியியல் அணுகுமுறை

ஊற்றுநீர் பிடிப்புப் பகுதியின் பாதுகாப்பு மற்றும் நிலத்தடி நீர் மேலாண்மை அடித்தளம் என்பது ஒர் அறிவியல் சார்ந்த அணுகுமுறையால் நீர் ஆதாரங்களையும் அவற்றிற்கு நீர் கொடுக்கும் சுற்றுச் சூழல்களையும் கண்டுப்பிடிப்பதேயாகும்.




நீரூற்றுப் பெட்டி ஊற்றுநீர் பாதுகாப்பு மற்றும் ஊற்றுநீர் சேகரிக்க உதவுகின்றது



ஒரு கிராமத்தின் நீர்கொள்படுகை வரைபடம்

## உகந்த தொழில்நுட்பம்

நீரூற்று முயற்சியின் உறுப்பினர்கள் மேம்பட்ட நீரூற்று பெட்டி, மணல் வடிகட்டிகள், நீர் ஆதாரத்திற்கான சுற்றுச்சூழல் மீட்பு மற்றும் புவிஈர்ப்பு சார்ந்த நீர் வழங்கல் அமைப்பு போன்ற சிறந்த நடைமுறைகளை உருவாக்கி வருகின்றனர்.

## அறிவு மற்றும் திறன் வலுப்படுத்துதல்

ஆய்வுகள் மற்றும் பயிற்சி திட்டங்கள் மூலம் திறன் மையங்கள் மற்றும் தனிப்பட்ட அறிவு தொகுப்புகள் அமைக்க முயற்சி எடுக்கப்பட்டு வருகின்றன. மாவட்ட அரசாங்க அலுவலர்கள், தொண்டு நிறுவனங்கள் மற்றும் சிட்டிசன் சயின்டிஸ்டு(துறை சாரா விஞ்ஞானிகள்) களுக்கு பயிற்சி அளிப்பதன் மூலம் நாங்கள் நீர் புவியியலை அனைவருக்கும் புரியும்படியாக செய்து அதை அடுத்த தலைமுறையின் பயன்படுத்துவோர் மற்றும் முடிவெடுப்பவர்களுக்கு திறந்த மூல அறிவாக செய்கிறோம்.



மேற்கு தொடர்ச்சி மலையில் நீரூற்றைப் பாதுகாக்க சமுதாயத்தின் தன்னார்வ பங்களிப்பு



கிழக்கு தொடர்ச்சி மலையில் நீரூற்றை சார்ந்த சமுதாயத்தை ஒன்று சேர்த்தல்



இமயமலையில் நீரூற்றின் நீரோட்டத்தை கண்காணித்தல்